இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU5239/ESU3139- விசேட தேவைகள்சார் கல்வியின் தற்காலப் போக்குகள்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 07.08.2021 நேரம் : மு.ப 09.30 - ந.ப 12.30

## பகுதி I

01. விசேட சூழ்நிலைகளுக்குட்பட்ட சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஆவணங்கள் ஐந்தினை (5) குறிப்பிடுக.

02. முறைசாரா கல்வியானது எவ்வாறு விசேட கல்விக்கு உறுதுணையாக அமைகின்றது என்பதற்கு மூன்று (3) வழிவகைகளைக் குறிப்பிடுக.

03. உள்ளடங்கல் கல்வியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் உறுதுணையாக அமைகின்ற காரணிகள் ஐந்தினை (5) குறிப்பிடுக.

04. இலங்கையில் குறைபாடுகளுடன்கூடிய சிறுவர்களுக்கான கல்வி தொடர்பாக உறுதிப்படுத்தும் தேசிய ரீதியான அரச ஆவணங்கள் ஐந்தினை (5) குறிப்பிடுக.

05. அனைவருக்கும் கல்வி – 1990 அறிக்கையின் இலக்குகள் குறைந்தது ஐந்தினை (5) குறிப்பிடுக.

06. குறைபாடுகளுடன்கூடிய தனிநபர்களுக்கான கல்வி சட்ட மூலத்தின் (IDEA) -2004 குறைந்தது ஐந்து (5) கொள்கைகளைக் குறிப்பிடுக.

07. உள்ளடங்கல் கல்வியானது ஏன் ஒரு குழு அணுகுமுறையாக கருதப்படுகின்றது. உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

08. இலங்கையில் விசேட தேவைகள்சார் கல்வியின் தற்போதைய சேவை முறையில் காணப்படுகின்ற குறைந்தது ஐந்து (5) சவால்களை குறிப்பிடுக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. i. சிறுவர்களுக்கான உரிமைகள் தொடர்பான மாநாடு (CRC) -1989 குடும்பங்களில் சிறுவர்களது அடிப்படை பராமரிப்பு அத்துடன் பாதுகாப்பு பொறுப்புணர்வு என்பவற்றை வலியுறுத்துகின்றது. உதாரணங்கள் குறிப்பிட்டு இக்கூற்றினை பரிசீலிக்குக.
(10 புள்ளிகள்)

ii. மேற்கூறப்பட்ட எண்ணக்கருவானது எவ்வாறு விசேட கல்விசார் தேவைகளையுடைய குடும்பத்துடன் தொடர்புபடுகின்றது என்பதை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.
(10 புள்ளிகள்)

10. i. முறையில் கல்வி எனும் எண்ணுக்கருவை விளக்கி விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களின் விருத்தியில் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை பொருத்தமான உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.
(08 புள்ளிகள்)

ii. வாழ்நாள் நீடித்த கல்வியானது திறந்த மற்றும் தொலைக்கல்வி அத்துடன் தொடர்ச்சியான கல்வி முறைமைகளினூடாக அடையப்படுகின்றது. விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களின் கல்வியில் ஏன் வாழ்நாள் நீடித்த கல்வி அதிக முக்கியத்துவம் பெறுகின்றது என்பதற்கான காரணங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
(12 புள்ளிகள்)

11. i. இலங்கையில் முன்வைக்கப்பட்ட மூன்று கல்விசார் சீர்திருத்தங்கள், சட்டமூலங்கள் அல்லது கொள்கைகளை ஒப்பிட்டு அவற்றினூடே விசேட கல்விசார் தேவைகளையுடைய சிறுவர்களின் கல்விசார் வாய்ப்புக்களை வழங்குதல், விருத்தி செய்தலுக்கான ஏற்பாடுகளை ஆராய்க.
(10 புள்ளிகள்)

ii. சிறுவர்களின் கல்வி விலகல் என்றால் என்ன? என்பதனை நடைமுறை உதாரணங்களுடன் விபரிக்குக.
(10 புள்ளிகள்)

12. i. முன் பள்ளிகளானது முறையான கல்வி முறைமையில் விசேட தேவைகளுடைய மாணவர்களை உள்வாங்குவதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டியிருக்கினறது. பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றினை விளக்குக.
(08 புள்ளிகள்)

ii. விசேட கல்விசார் தேவைகளையுடைய மாணவர்கள் பாடசாலை கல்வியை வெற்றிகரமாக ஆரம்பிப்பதற்கு உதவுவதில் முன்பள்ளி கல்விமுறை அத்துடன் ஆரம்பக் கல்விமுறை எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டி இருக்கின்றது என்பதை உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக.
(12 புள்ளிகள்)

13. i. ஒருங்கிணைத்தலின் நான்கு (4) கட்டங்களை குறிப்பிட்டு, விசேட கல்விசார் தேவைகளுடைய மாணவர்களின் விருத்தியில் எத்தகைய கட்டமானது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குக. உமது விடையை நியாயப்படுத்துவதற்கு பொருத்தமான உதாரணங்களை வழங்குக.

(10 புள்ளிகள்)

ii. அனைவருக்கும் கல்வி தொடர்பான உலக பிரகடனம் அத்துடன் (EFA 1990) சல்மன்கா உடன்படிக்கை (1994) ஆகியவை உலகில் உள்ளடங்கல் கல்வியின் நடைமுறைப்பாட்டை எவ்வாறு ஆரம்பித்திருக்கின்றது என்பதனை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

14. i. இலங்கையில் குறைபாடுகளுடைய மாணவர்களுக்கு வெற்றிகரமாக கல்வியை மேற்கொள்வதற்கான சிறுவர் உரிமைகள் தொடர்பான நடைமுறைப்பாட்டை மேம்படுத்தும் ஆலோசணைகள் சிலவற்றை குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. விசேட சூழ்நிலைக்குட்பட்ட சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பில் குறிப்பிடும் சரத்துக்களை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை (2) அவை எவ்வாறு விசேட சூழ்நிலைகளுக்குட்பட்ட சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்றது என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*